RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s222617

OPEN ACCESS

# மீராவின் கவிதைகளில் மானிடவியல் பண்புகள்

சி. பிரதீமா [அ, *], இரா. கலைச்செல்வி [அ]

[அ] தமிழாய்வுத்துறை, திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராசிபுரம்-637401, தமிழ்நாடு, இந்தியா

# Anthropological Traits in Meera's Poems

C. Prathima [a, *], R. Kalaiselvi [a]

[a] Department of Tamil, Thiruvalluvar Government Arts College, Rasipuram-637401, Tamil Nadu, India

* Corresponding Author: Prathiananth@gmail.com

Received: 15-09-2022
Revised: 07-11-2022
Accepted: 14-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Behaviors, cultures, and norms found in human societies vary according to their individuality and time. for example the lifestyles of the ancient people and the lifestyles of the present era are completely different. This results in changes in people's behavior and characteristics. Such changes in people's characteristics made changes in people's political life, love life, their contribution to society, poverty level, for the well-being of capitalism. When king ruled the country the welfare of the people has been overlooked. since the day when the monarchy changed to democracy everything changed. The people in high position fails to give importance to citizen's. During Sangam era ove and valor were highly appreciated and considered to be two eyes. Modern age love is based on caste, religion and relationship. Society that creates unemployment in the name of civilization, marginalized people, high class people who exploits the poor people, although their characteristic interests are different, all are regarded as human characteristics. The purpose of this article is to investigate about all these things in Meera's poems.

**Keywords:** Meera, Society, Poverty Level, Welfare

## முன்னுரை

தமிழ்ச் சூழலில் மானிடவியல் பண்பாடு எண்ணற்ற தளங்களைக் கொண்டுள்ளது. சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரையிலுமுள்ள மானிடவியல் பண்புகள் பல்வேறு மாற்றங்களைப் பெற்றுள்ளது. காலத்திற்கேற்ப, சமூக வளர்ச்சி நிலைகளுக்கேற்ப மக்கள் தங்களது வாழ்க்கை முறைகளையும், பண்பாட்டு நெறிகளையும் மாற்றிக் கொள்கின்றனர். இம்மாற்றங்களுடன் சாதி, சமயம், சமூகம், அரசியல், பொருளாதாரம், வாழ்க்கை முறைகள் ஆகியனவும் உள்ளடங்கும். இத்தகு மானிடவியல் கூறுகள் மீராவின் கவிதைகளில் எங்ஙனம் அமைந்துள்ளது என்பதை, இக்கட்டுரை வெளிக்கொணர்கிறது.

## மானிடவியல்- வரையறை

மானிடவியல் என்பது மனித இனம் பற்றிய அறிவியல் கல்வித்துறை ஆகும். இது மனித குலத்தைச் சமூக நிலை, பண்பாட்டு நிலை, உயிரியல் நிலை போன்ற வேறுபட்ட நிலைகளில் கடந்த கால மக்களையும், சமகால மக்களையும் ஆராயும் விரிந்த இலக்குடையதாக உள்ளது. என்று மானிடவியலாளர்கள் மானிடவியல் என்பதற்கு வரையறை தருகின்றனர்.

"உயர்திணை என்மனார் மக்கள் சுட்டே" (Thamizhannal, 2010)

தொல்காப்பியர் மக்களை உயர்திணை என்னும் சொல்லால் குறிப்பிட்டுச் செல்கிறார். இத்தகைய மக்கள் தங்களது வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்களைச் சந்திக்கின்றனர். இம்மாற்றங்களில் சில மக்களுக்கு சாதகமானதாகவும், சில மாற்றங்கள் பாதகமானதாகவும் அமைகிறது. இத்தகு மாற்றங்களைப் பற்றி கவிஞர் மீரா தன் கவிதைகளில் பதிவு செய்கிறார்.

## அரசியல்

பழங்காலம் முதல் இக்காலம் வரையிலும் நம் நாட்டில் நிலவுகின்ற ஒரு நடைமுறை, அரசியல். ஒரு நாட்டை ஆட்சி செய்யும் மன்னனால்தான் அந்நாட்டின் வளர்ச்சியானது அமையும். இதனை, ஒளவையார்

"வரப்புயர நீருயரும்

நீருயர நெல் உயரும்

நெல்லுயரக் குடி உயரும்

குடி உயரக் கோல் உயரும்.

கோல் உயரக் கோன் உயர்வான்"

என்ற புறநானூற்றுப் பாடலின் வழி கூறுகிறார் (Ilampuranar, 1971).

மேலும், நீதியோடு மக்களை காப்பாற்றும் மன்னனை மக்கள் கடவுளாக எண்ணி வழிபடுவர் என்ற கருத்தை வள்ளுவர்,

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறையென்று வைக்கப் படும்"

என்ற குறளின் வழி நிறுவுகிறார் (Puliyur Kesigan, 2009). இவ்வாறான அரசியல் முறை நடந்து வந்த நமது நாட்டில் தற்போதைய அரசியல் நிலையைப் பற்றி மீரா தனது கவிதையில் பதிவு செய்கிறார்.

"எங்கள் ஊர் எம். எல். ஏ.

ஏழு மாதத்தில்

எட்டுத் தடவை

கட்சி மாறினார்.

இன்னும் எழுபது

கட்சி இருந்தால்

இன்னும் வேகம்

காட்டியிருப்பார்...

என்ன தேசம்?

இந்தத் தேசம்?" (Samraj, 2019)

மக்களின் நலனையே கருத்தில் கொண்டு ஆட்சி செய்த மன்னர்கள் வாழ்ந்த நாட்டில் மாதத்திற்கு ஒரு கட்சி மாறும் தற்கால அரசியல்வாதிகளின் நிலையைக் காட்டுவதாய் இக்கவிதை அமைகிறது.

## காதல்

காலங்காலமாய் மனிதப் பண்புகளில் அடங்கியது. காதல். காதலின் அழகையும் உணர்வையும் மிகுதியாய் காட்டுவது நம் தமிழ் இலக்கியங்கள். இதில் குறுந்தொகைப் பாடலொன்று,

"யாயும் ஞாயும் யாராகியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்

யானும் நீயும் எவ்வழி அறிதும்

செம்புலப் பெயல்நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே." (Nagarajan, 2004)

என்று பகர்கின்றது. தலைவனின் தாய் தந்தையரும், தலைவியின் தாய் தந்தையரும் எவ்வழியிலும் உறவு இல்லையெனினும், தலைவன் தலைவியின் நெஞ்சமானது, செம்மண் நிலத்தில் பெய்த மழைநீரானது மண்ணோடு கலந்து சிவந்தாற் போல கலந்தது என்று இப்பாடல் கூறுகிறது. இதே போன்று கவிஞர் மீரா நவயுகக் காதலைப் பற்றி தன் கவிதையில் கூறுகையில்,

"உனக்கும் எனக்கும்

ஒரே ஊர்

வாசு தேவ நல்லூர்...

நீயும் நானும் ஒரே மதம்

சைவப் பிள்ளைமார் வகுப்புங் கூட....

உந்தன் தந்தையும்

எந்தன் தந்தையும்

மைத்துனன் மார்கள்

எனவே

செம்புலப் பெயல் நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே" (Samraj, 2019)

நவயுகக் காதலானது, ஊர், சாதி, மதம், உறவுமுறை ஆகியவற்றை அறிந்த பின்னரே வருகிறது என்பதை மீரா இக்கவிதையின் வழி உணர்த்துகிறார்.

## சுரண்டல்

உழைப்பவனின் உழைப்பு அவனுக்கு பயன்படாது, அவனை உழைக்க வைப்பவனுக்கே பயன்படுகிறது. நாள் முழுவதும் தன் ஆற்றலை வெளிப்படுத்தி கடின உழைப்பினை தன் மூலதனமாகக் கொண்ட விவசாயிகளின் உழைப்பைச் சுரண்டி வாழும் மூர்க்கர்களின் தன்மையை கவிஞர்,

"ஒருவன் கதிரவன் உதிக்கும் முன்னே

காலை வேளையில் கண் விழிக்கின்றான்

வயலை நோக்கி வருகிறான், உழைக்கிறான்.

ஒவ்வொரு நாளும் பாடுபடுகிறான்,

மணிகளைப் பார்க்கிறான் ஒருநாள் அறுக்கிறான்

ஆனால் திடீரென ஒருவன் திருடன் போல் வந்தே

வண்டியில் ஏற்றிச் செல்கிறான் இப்படி

ஒருவன் உழைக்க மற்றொருவன் பிழைக்க

இருப்பதா வாழ்வு?"

என்ற கவிதையின் வழி காட்டுகிறார். பிறரின் உழைப்பைச் சுரண்டி வாழும் மனிதர்களின் பண்பைக் காட்டுவதாய் இக்கவிதை அமைகிறது. மாடு போல் ஒருவன் உழைத்தாலும் மறுபக்கம் இன்னொருவன் அவனது உழைப்பைச் சுரண்டி கொண்டுதான் இருக்கிறான் என்பது இக்கவிதையின் வழி அறியலாகிறது.

இதே கருத்தை பாரதிதாசனும் தன் கவிதையின் வழி வெளிக்காட்டுகிறார்.

"மாடாய் உழைப்பவருக்கு வீடில்லை சோறில்லை

கையலுத்துக் காலலுத்துக்

காலமெல்லாம் உழைப்பவர்

கண்டதில்லை ஒரு தானம் - ஆண்டைகள் வீட்டில்

ஐயருக்கோ கோதானம்"

உழைப்பவனுக்கு அவன் உழைப்பினால் எந்த பலனும் கிடைப்பதில்லை என்பதை இக்கவிதை காட்டுகிறது. மனிதனை மனிதனே சுரண்டி வாழும் மானுடப் பண்பு இக்கவிதையின் வழி வெளிப்படுகிறது (Komuki Suppiramaniyan, 2016).

மேலும் பாட்டாளி வர்க்கத்தின் குருதியைக் கொதிக்க வைத்து நரம்புகளை முறுக்கேற்றி ஆணவம் கொண்டோர்க்கு எதிராக அரும்படை திரட்டிப் பெரும் போர் தொடுப்பதற்குப் பாரதிதாசன் தீட்டிய பல கவிதைகள் பட்டை தீட்டப் பெற்ற வைர வாட்கள்.

"எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க

ஏறுகள் ஏங்கிடுமோ?- இனிப்

புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்

புதரினில் தூங்கிடுமோ?"

என்று பாடிய பாரதிதாசன் பாட்டாளி வர்க்கத்தின் படைக்கலனாக விளங்கியவர் (Komuki Suppiramaniyan, 2016). இப்படைக் கலனைத் தாமும் பக்கபலமாகக் கொண்டு பணியாற்றியவர் கவிஞர் மீரா,

"மனிதனாய் மாறு: மாற்று உன் சாதியை

முதலாளித்துவ முதுகெலும்பை முற !

பாடுபடுவோர்க்கே பாரெனப் பாடு

சமத்துவச் சங்கொலி செய்து

சமைத்திடு தம்பி புதியதோர் தரணியே" (Samraj, 2019)

என்ற வரிகளால் பாட்டாளி மக்களுக்குப் புத்துணர்ச்சியை அளித்தவர். முதலாளித்துவத்திற்கு எதிராக தன் கவிதைகளால் புரட்சி செய்தவர் கவிஞர் மீரா. பாட்டாளி மக்களின் உழைப்பை சுரண்டி வாழும் முதலாளித்துவ வர்க்கத்தினரை எதிர்த்துப் போராடும் மானுடப் பண்புகளை கவிஞர் இக்கவிதையில் பதிவு செய்கிறார்.

## நாகரீகம்

பண்டைய நாகரீகத்திற்கும் நவின நாகரீகத்திற்கும் இடையே பல்வேறு வேறுபாடுகள் எழுந்து விட்டன. இன்றைய மனிதர்களின் கலாச்சாரமும், பண்பாடும் அவர்களின் பண்பு நலன்களில் ஒன்றாகவே கலந்துவிட்டன. இத்தகு மாற்றங்கள் மக்களின் வாழ்க்கை நலனையும் பாதித்து விடுகிறது. இதனை,

"முன் பெல்லாம்

முடி வளர்ப்பார்கள்.

திருப்பதி பழனி திருச்செந்தூர் போய்

மொட்டை அடிக்க

இப்போதெல்லாம்

நாகரிகத்தை

வளர்க்கிறோம் என்று

முடி வளர்ப்பார்கள்

எங்களை மொட்டை அடிக்க"

என்ற கவிதையின் வழி கவிஞர் வெளிப்படுத்துகிறார் (Samraj, 2019). நாகரீகம் என்ற பெயரில் முடி வளர்க்கும் இன்றைய பண்பாடு, முடி வெட்டுவதை தன் தொழிலாகக் கொண்டவர்களின் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கிறது என்பதை இக்கவிதைக் கூறிச் செல்கிறது.

## முதலாளித்துவம்

முதலாளிகளின் ஆதிக்க நிலை இன்றளவும் சமூகத்தில் காணப்படுகின்றது. முதலாளிகளின் ஆதிக்கத்திற்கு உட்படுவது மட்டுமின்றி அவர்களின் குழந்தைகளிடமும் இந்த தொழிலாளிகள் படும் அவத்தையை கவிஞர் தன் கவிதை வரிகளில் பதிவு செய்கிறார்.

"கொட்டிக் கிடக்கும் மணலில்

குதித்து விளையாடும்

கொத்தனார் மகன் கூறினான்.

"எங்க நைனா

கட்டியதாக்கும்

இந்த வீடு.....

எங்க வீடு...

முதலாளி மைந்தன்

முறைத்தான்....

வேறு கொத்தனார்

வேலைக்கு வந்தார்"

குழந்தைகளின் யதார்த்தமான வார்த்தைகளால் கொத்தனாரின் வேலையின்மையை இக்கவிதை காட்டுகிறது (Samraj, 2019). மகன் சொன்ன வார்த்தைக்காக கொத்தனாரை மாற்றிய மனிதத் தன்மைற்ற முதலாளித்துவம் இன்றளவும் காணப்படுகின்றது.

## ஏழ்மை

சமுதாயம் எத்தனை வளர்ச்சி நிலையை அடைந்தாலும் ஏழ்மை நிலையில் வாழும் மக்கள் இன்றளவும் அதே நிலையிலேயே உள்ளனர். வறுமை நிலையில் உணவின்றி, இடமின்றி, ஆடையின்றி தவிக்கும் மக்களை கவிஞர்,

"பரட்டைத் தலையும்

எலும்பும் தோலும்

கிழிந்த கந்தையுமாக"

என்ற வரிகளால் சுட்டுகிறார் (Samraj, 2019). ஏழ்மை நிலையினால் அவர்களை சமுதாயத்திலிருந்து பின் தள்ளி வைக்கும். நிலை இன்றளவும் காணப்படுகிறது. ஏழ்மை நிலையில் உள்ள ஒருவன் பரட்டைத் தலையுடன் எலும்பும் தோலுமாகவும் கிழிந்த ஆடையையும் கொண்டிருப்பான் என்று கூறுவது, அவனது இல்லாமையை வெளிக்காட்டுவதாய் உள்ளது.

## கையூட்டு

இன்றைய சமுதாயத்தில் கையூட்டு இன்றி எந்த வேலையும் நடைபெறுவதில்லை. கல்வி, வேலை, அலுவலக வேலைகள் அனைத்திற்கும் கையூட்டு எதிர்ப்பார்க்கும் நிலை இன்று நிலவுகிறது இதை கவிஞர்,

"பத்து ரூபாய்க்கா

பார்த்து சொல்வேன்

அவ்வளவு எளிதாய்

அலைய விட்டு நான்

அப்புறம் கறப்பேன்

அறுபது எழுபது"

என்ற கவிதையின் வழி கூறுகிறார் (Samraj, 2019). அலுவலக வேலையாய் வருபவர்களிடம் கையூட்டு வாங்கிக் கொண்ட பின்னரே அவர்களது வேலையை முடித்து தரும் அவலம் இன்றளவும் காணப்படுகின்றது. ஊழல் ஒழிப்பு, லஞ்ச ஒழிப்பு என எத்தனை முறைகள் வந்தாலும் லஞ்சம் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பது இக்கவிதையின் வழி அறிய வருகிறது.

## முடிவுரை

மனித வாழ்க்கைக் காலத்திற்கேற்ப சூழ்நிலைக்கேற்ப பல்வேறு மாற்றங்களை அடைந்து வருகிறது. அவர்களின் பண்புகளும், அவரவர்களின் தகுதிக்கு ஏற்றாற் போல மாறுபடுகின்றது. சில மானுட பண்புகள் காலங்காலமாக தொடர்ந்து வருகிறது. இத்தகு மாறுபட்ட பண்புகளை, கவிஞர் மீராவின் கவிதையை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை வெளிக்காட்டியுள்ளது.

## References

Ilampuranar, (1971) Tolkappiyam Porulathikaram, Kazhaga veliyedu, Chennai, India.

Komuki Suppiramaniyan, (2016) Bharathidhasan Thaen Thamizh Kavidhaigal, Narmadha Padhipagam, Chennai, India.

Nagarajan, V. (2004) Kurunthokai, New Century Book House (P)Ltd, Chennai, India.

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

Samraj, Y. (2019) Meera kavithaigal, Gowra Publications, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License